**த. நா.ச.பே. எண் : 001** **நாள் : 23.01.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (23.1.2017) சட்டமன்றப் பேரவையில் 2017-ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து ஆற்றிய உரை**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழர்களின் பண்பாட்டு சின்னமாக விளங்கும் ஜல்லிக்கட்டு 2006-ஆம் ஆண்டு முதலே பல்வேறு சோதனைகளை சந்தித்துள்ளது. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவை அவ்வப்போது வழங்கிய பல்வேறு இடைக்கால உத்தரவுகளின்படியே ஜல்லிக்கட்டு நடைபெற்று வந்தது. இந்த நிலையில், 2011–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் பிராணிகள் நலப் பிரிவு, ஜல்லிக்கட்டு நிகழ்வு, பழக்கப்பட்ட விலங்கின் செயலைக் காட்சிப்படுத்துவது எனக் குறிப்பிட்டு, எனவே அவை தடை செய்யப்பட வேண்டும் என பரிந்துரைத்து பிராணிகளுக்கு இழைக்கப்படும் தீங்கினை தடுத்தல் சட்டத்தின் பிரிவு 22-ன் கீழ் புலிகள், கரடிகள் ஆகியவைகளுடன் காளையையும் சேர்க்க வேண்டும் என பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில், தி.மு.க அங்கம் வகித்த காங்கிரஸ் கூட்டணி அரசு தனது 11.7.2011 நாளிட்ட அறிவிக்கையில் காளையையும் இந்தப் பட்டியலில் சேர்த்து அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது.

உச்சநீதிமன்றம், மத்திய அரசால் 11.7.2011 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் பிராணிகள் வதை தடுப்புச் சட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 7.5.2014 அன்று இறுதி உத்தரவை பிறப்பித்தது.

அதன்படி, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தவும், மகாராஷ்டிராவில் காளைமாட்டுப் பந்தயத்தை நடத்தவும் முழுமையான தடை பிறப்பிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறை சட்டம் 2009, இந்திய பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ளதால், இது மத்திய சட்டத்திற்கு எதிரானது என உச்சநீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த உச்சநீதிமன்ற ஆணைக்கு எதிராக தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனு உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் 7.1.2016 அன்று ஒரு அறிவிக்கையை வெளியிட்டு ஜல்லிக்கட்டு நிகழ்வுக்கு வழி செய்தது. ஆனால், பல அமைப்புகள் இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தடை உத்தரவை பெற்று விட்டன. இந்த வழக்கின் விசாரணையை உச்சநீதிமன்றம் முடித்து விட்டது. இறுதி தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை. எனவே, ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு ஏதுவாக, அவசர சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் வலியுறுத்தி வந்தேன். 19.1.2017 அன்று புதுடில்லியில் அவரது இல்லத்தில் சந்தித்து, இது பற்றி விரிவாக விவாதித்த போது, மத்திய அரசின் அறிவிக்கை தொடர்பாக உச்சநீதிமன்ற வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளதால், மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்ற வாக்குறுதியை அளித்தார்கள்.

ஜல்லிக்கட்டு நடைபெற மாநில அரசு உடனடியாக சட்டப்பூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை

சட்ட வல்லுநர்கள் மற்றும் அரசு உயரதிகாரிகளுடன் ஆலோசித்து மத்திய அரசின் மிருக வதை தடுப்புச் சட்டத்தில் மாநில அளவிலான திருத்தங்கள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

மத்திய அரசின் சட்டத்தில் உள்ள ஷரத்துகளுக்கு முரணாக, மாநில அரசு, மாநிலத்திற்கான சட்ட திருத்தம் இயற்ற இயலும். எனினும், அந்த சட்டத்திற்கு மத்திய அரசின் பரிந்துரையுடன், மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடர் 23.1.2017 அன்று தான் துவங்குகிறது என்பதாலும், சாதாரணமாக சட்ட முன் வடிவுகளுக்கான சட்டமன்ற ஒப்புதல் கூட்டத் தொடரின் கடைசி நாளிலேயே பெறப்படும் என்பதாலும், அதன் பின்னர், மாண்புமிகு மாநில ஆளுநர் மூலமாக மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பதாலும், இவை அனைத்திற்கும் கால தாமதம் ஏற்படும் என்பதால், அவசர சட்டம் பிறப்பிக்க முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே அவசர சட்டம் 21.1.2017 அன்று பிறப்பிக்கப்பட்டது.

இந்த அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக, ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதற்கான அனைத்து தடைகளும் நீக்கப்பட்டன. ஜல்லிக்கட்டு நிகழ்வு என்பது ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை பல்வேறு இடங்களில் அந்த அந்த ஊர் மக்களால் நடத்தப்படுவதாகும். ஜல்லிக்கட்டு நிகழ்வுக்கு 21.1.2017 முதல் நடத்துவதற்கு எந்த வித தடையும் இல்லை. எனவே, ஜல்லிக்கட்டு நிகழ்வு நடத்த விரும்பும் ஊர் மக்கள் தங்கள் விரும்பும் நாளில் அதனை நடத்திக் கொள்ள இயலும்.

இந்திய அரசமைப்பு சட்டத்தின் 213-வது ஷரத்தில், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறாத காலத்தில், அவசர சட்டங்களை இயற்றுவதற்கு ஆளுநருக்கு உள்ள அதிகாரம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய சட்டம் பற்றிய பொருளாக இருப்பின், இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றே ஆளுநர் அவசர சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முடியும். அந்த வகையில், அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இந்த அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு நடத்திட சரியான நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டுள்ளது. 2009-ஆம் ஆண்டு தமிழக அரசால் ஜல்லிக்கட்டு நடத்திட இயற்றப்பட்ட சட்டம் மத்திய அரசின் மிருக வதை தடுப்புச் சட்டத்திற்கு முரணானது என உச்சநீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே, ஜல்லிக்கட்டு நடத்திட சரியான சட்ட நடவடிக்கை என்பது மத்திய அரசின் 1960-ஆம் ஆண்டைய மிருக வதை தடுப்புச் சட்டத்திற்கு தேவையான சட்ட திருத்தங்களை கொண்டு வருவது தான். இந்த சட்டத்தில் உள்ள சில ஷரத்துகளுக்கு சட்ட திருத்தம் மத்திய அரசாலும் கொண்டு வர முடியும். மாநில அரசாலும் கொண்டு வரமுடியும். மத்திய சட்டத்திற்கு திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வந்தால் அது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அத்தகைய சட்ட திருத்தம் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான அல்லது குறிப்பிட்ட மாநிலங்களுக்கான சட்ட திருத்தமாக இருக்கும். மாநிலங்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப மத்திய அரசின் சட்ட ஷரத்துகளுக்கு மாறுபாடான சட்ட திருத்தங்களை கொண்டு வரவும் இந்திய அரசமைப்புச்

சட்டம் வழிவகை செய்கிறது. ஆனால், மத்திய சட்டத்திற்கு, மாநில அளவில் சட்ட திருத்தம் கொண்டு வரப்படும் போது, அதற்கு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

தற்போது அவசர சட்டம் வாயிலாக 1960-ஆம் ஆண்டைய மிருக வதை தடுப்புச் சட்டத்திற்கு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த சட்டத்தில் 2, 3, 11, 22, 27 மற்றும் 28 ஆகிய ஷரத்துகளுக்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவசர சட்டத்திற்கு மாற்றாக சட்டமன்ற ஒப்புதலுடன் இந்த தமிழ்நாடு திருத்தங்கள் உடனடியாக கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தான் இன்றே இந்த சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கு தெளிவாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே ஜல்லிக்கட்டுக்கு எப்பொழுதெல்லாம் தடை வந்தபோதும் அதனை தடுத்து நிறுத்தி சட்டத்தின் மூலமாக ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு தான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றம் வரை சென்று போராடி வந்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடைபெறுகின்ற மாண்புமிகு அம்மாவுடைய அரசு அந்த வேலையை நிறைவாக இப்பொழுது, இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்களுக்கு செய்து தந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**